# மௌனம் - SILENCE



எவ்வளவு சத்தமாகவும் பேச முடிகிறது மௌனத்தில் - மௌனம் கொடுத்த சுதந்திரம்
எப்பொழுது வேண்டுமானாலும் அழ முடிகிறது மௌனத்தில் - மௌனம் கொடுத்த உரிமை
யாரை வேண்டுமானாலும் சாட முடிகிறது மௌனத்தில் - மௌனம் கொடுத்த தைரியம்
தவறுகளையும் போலித்தனங்களையும் பகிரங்கமாக எதிர்க்க முடிகிறது மௌனத்தில் -
மௌனம் கொடுத்த ஆயுதம்
மன கொந்தளிப்புகளையும், கோபங்களையும் வெளிபடுத்த முடிகிறது மௌனத்தில் -
மௌனம் கொடுத்த ஆரோக்யமான கருத்து பரிமாறல்
சிறு சிறு ஆசைகளையும் ஊடல்களையும் மிக அழகாகவும் ரம்யமாகவும் சொல்ல முடிகிறது மௌனத்தில்-
மௌனம் கொடுத்த ரகசிய பாஷை
முதிர்ந்த பருவத்தில் தனிமை வலி தெரியாமல் இருக்க ஓயாமல் பேச முடிகிறது மௌனத்தில் -
மௌனம் கற்று கொடுத்த வாழ்க்கை பாடம்
தாயின் கர்பையில் தொடங்கிய மௌனம், என் உயிர் பிரியும் பொழுதும் என்னுடன் பிரியாமல் ஒட்டி கொண்டிருகிறது..

இந்த நிதர்சனமான நிசப்தத்திலும் என் அருகாமையில் இணை பிரியாத சிநேகிதியாக என்னை முழுமையாக வியாபித்து கொள்ள அனுமதி கேட்கிறது இந்த மௌனம்
சம்மதித்தேன் முழுமையாக -
மௌனத்திற்கு நான் கொடுத்த இறுதி மரியாதை...

Gayathri Ramesh
GRD Iyers